# திறவுகோல்



2056
பங்குனி
மாத
இதழ்

வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

*மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.*

*இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.*

*குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.*

*நோக்கம்:*
*மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.*

*எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...*
*பகிரி: +91 8220567322*

*இணையம்:*
*https://maintharkal.mannai.in/*

# எதிலிருந்து பிறந்தோம்



அந்த நடை ஒத்துப் போனது
அந்த குணம் ஒத்துப் போனது
நாம் நகரத்தயாராகும் பொழுது உடன் வர நினைக்கும் எண்ணமும் ஒத்துப் போனது
எதுலிருந்து பிறந்தோமென்பதே கேள்வி.

ஓடை நிரம்பிய நீரில்
எனக்கும் தாகம் தீர்ந்தது
அதற்கும் தாகம் தீர்ந்தது
அதே கைகள்
அதே கால்கள்
நிமிர்ந்தும் நிமிராத நடை
அவ்வப்போது தாவும் மனமில்லாத கிளைகளென
அனைத்தும் ஒத்துப் போய்தான் இருந்தன
அறிவினை மட்டும் விரல் விட்டு
எண்ணும்பொழுது முளைக்காத
ஆறாவது அறிவில் சுழியாகிப் போனதால்....

## காதலர்

காதலுக்கு மட்டும் தான்
எனது முகம் சிரிப்பினை
தாரைவார்த்திருந்த்து
பள்ளி கால பிடித்தவர்களையெல்லாம்
காதலென்றுதான் நண்பர்களால்
சொல்லப்பட்டிருந்த்து.

சில மௌனமான காதல் மொழிகள்
அவ்வயதில் அறியப்படாத சிதம்பர ரகசியங்கள்
இதுதான் காதலென
எம் ஜி ஆரும் சிவாஜியும்
அவ்வப்போது வெள்ளிக்கிழமை
இரவுகளில் கருப்பு வெள்ளையாக
சொல்லி செல்வர்.

நண்பன் சொன்னான் ஒருநாள் கடிதம் எழுது
காதலை சொல்
உனக்கானவள் அவளென்று
பல்பம் கரைவதற்குள் அவள் பார்வை
என்னை கடந்தும் கடத்தியும் சென்றதால்
நான் பார்வையில் கடிதம்
கொடுத்திருந்தேன்.

நிராகரிப்புகளுக்கு கலங்கிய வயதுதான்
நான் காதலை அறிந்த வயது
அன்றெல்லாம் மர நிழல்கள்
காதலை உதிர்த்து மலரத் தொடங்கி
பசுமையளித்து அசைந்திருந்தன.

நான் மட்டும் நிறுத்திய சைக்கிளின்
'பெல்' நுனியை அழுத்தியும் அழுத்தாது
காதலில் காதலின் வருகைக்காக
காத்திருந்தேன்.

நண்பர்கள் மத்தியில்
நடுநிலையானவனாகவும்
சிறிது தள்ளி லவ்வரெனும் தர
அட்டையை சுமந்தவனாகவும் பயணித்த
காலமது.

ஒன்றாம் வகுப்பு முதல் முதுகலை

முடித்து வெளியேறிய நாள்வரை
ஒரு லவ்வரும் பல கிரஷ்களும்
கனவுகளுக்கு அட்டவணையிட்டிருந்தன

எனக்கு தெரிந்த அளவிற்கு
காதலுக்கு முக்கியமானது
நினைத்தல்
கொடுத்தல்
அவ்வப்போது நிராகரித்தல் காதலை
அல்ல
மனம் நெகிழ்ந்த அவைகளை

இருந்ததாலும் நான் நிராகரிப்பட்ட
லவ்வராகவே இறுக்க விரும்புகிறேன்
ஏனென்றால்
கண்ணுக்கெட்டிய தூரத்திலும்
கடைவீதிகளிலும்
அந்த கடற்கரையில் எனக்கு முன்பும்
நான் சென்றபின்பு
எனது காலடியிலும்
நான் விட்டுச் சென்ற
என்னை இறுக பற்றிடா ஓர் காதலும்
நடைபோட்டு கொண்டிருக்கக்கூடும்
அவைகளெல்லாம் இதுவரை
எனக்களித்த பெயிரிலே நான் இருந்து
விட்டு செல்கிறேன்...

இன்றும் அவர்களின் லவ்வராக.....!

## தித்தினியின் குறிப்பீடுகளில் நீள்கிறது கானம்:

கானம் திறக்கப்படுகிறது
அப்பாவின் கர்ஜனைகளில்
அம்மாவின் அனுசரணையில்
பாட்டியின் கதைகளில்
தாத்தாவின் மீசை முறுக்குகளில்..

விடியலில் கானமிடும்
சிறு தவளை ஓலங்களும்
தட்டான்களின் இறகசைவுகளும்
வாலாட்டிக்கொண்டே பசியை கூறும்
பாலின மா' க்களும் குறிப்பீடுகளில்
நிரம்பிடாத கானத்திற்குள் நிள்கின்றன..

கூட்டுக்குள் கருவென
கூடு பெறுத்து புழுவென
கூட்டினை நகர்த்தி வண்ண நாரென
கிழிந்த கூடுகளில்
நூலிடை சிக்கிய வண்ணங்களுக்கென
நீளத்துவங்குகிறது
கானங்களின் குறிப்பீடுகளில் நீள்பெறும்
திதலிகள்

ஒரு செமிபீரேவ்களில்
சிறு சிறு மினிம் அசைவுகளில்
உரக்கமான குரோச்சட் ஒலிகளில்
நீண்டுகொண்டே சிறைபிடிக்கிறது
குவேவர் அளவில் மனம் விட்டு பறக்கும்
தித்தினியின் கான குறிப்பீடுகள்
வண்ணங்களாய்....!

## எனை நிரப்பிக் கொள்கின்றன அந்த இருபாதிகள்:

போதும் போதுமென பேரின்பத்தில்
ஆழ்த்திய நீரோடையில்தான்
நான் நீந்த தயாராக உள்ளேன்
வாகாய் நிரம்பிய வசை மொழிகளுக்கு
மொழிப்பெயர்ப்பிடும்

முழுநேர மௌனக் கூடுகளுக்குள்
நான் சிறகு முளைத்திடா
பறவையென முடங்கி கிடக்கிறேன்...

வேண்டும் வேண்டாமென
கூறிய நிலைபாடுகளில்
விருப்பங்களை கைக்குட்டையில்
வியர்வைத்துளிகளாய் துடைத்துதறி
மீண்டும் கசங்கியே கிடந்தாகிறது
வேண்டுமென தவிர்த்த பல
வேண்டாதவைகள்..

இரு உள்ளங்கை குமிழ் நீர்களில்
எட்டிப்பார்த்திடும் வரை
நரம்பிதான் கிடைக்கிறது
யாரும் எட்டிப்பார்க்காத வானம்
மேலும் நிரம்பிய கேட்கிறது
கரங்களை மடக்கி வழிந்தோடுகிறது
மழை மேகம்...

கருப்பு வெள்ளையென சதை கிளறி
சிவப்பு வழிந்தும்
ஆசைகளை புணரும் அந்தரங்க
கோட்டிற்குள் தான்
எழுதாத பழுப்பு நிற கோடுகள்
வழிவிட்டு தவறுதலாய்
கீறப்பட்டிருக்கின்றன
புணர மறுத்த மனங்களுள்...

கண் காது மூக்கென சித்தரிக்கப்பட்ட
மொத்த கதைகளுக்கு
எப்பாதியை நான் தாரை வார்ப்பது
முளைக்காது முண்டமென திரியட்டும்
முந்த இயலாத
முட்டி காயத்தில் வீழ்ந்த மனங்களின்
சுபாவங்கள்....!

## மதில் மேல் விளிம்பிலாடும் பூனை மனம்

நான் அமைதியாக இருப்பதால்
என்னை நாங்கள்
தனிமைபடுத்தி விடாதீர்கள்
உங்களுடன் பயணிக்கவும்
நீள்கின்ற நேரத்தின்
விரல்பிடித்து நடக்கவும்
எனக்கும் ஆசைதான்

நான் நகர்ந்து செல்வதை
நீங்கள்
விருப்பமின்மையென நினைக்கலாம்
ஆனால் அது உண்மையல்ல
நீங்கள் கொஞ்சம்
புன்னகைத்து நகருங்கள்
உங்களின் பத்து முறை புன்னகைக்கு
பிறகு
கண்டிப்பாக எனது முதல் புன்னகை
மலரத்தொடங்கும்
அதுவரை எனக்கு வாய்ப்பினை வழங்கி
பொறுமை கொள்ளுங்கள்

எனது முதல் புன்னகையின்
தொடக்கத்தில்
கண்டிப்பாக நட்பு தொடங்கிவிடும்
நீங்கள் யாராக வேண்டுமானாலும்
இருங்கள்
எனது மௌனத்தை அங்கீகரித்து சிறு
நலம் விசாரிப்பிகளில்
என்னை புரிந்து கொள்ளுங்கள்

நான்
உங்களை விலகி செல்ல நினைக்கும்

வேளையிலெல்லாம்
என்னை உங்களுடன் இணைத்துக்
கொள்ளுங்கள்
கண்டிப்பாக நட்பு வட்டத்தின்
விளிம்பிலிருந்து உள் வர முயல்கிறேன்
மதில்மேல் பூனையென
கரமிணைக்க மறவாதீர்

நட்பினை அந்தரமிடாத சுவர்மீது
பயணிக்கலாம் அலாதியாக....!

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.

---

# ஒரு கோப்பை தேநீர் போதும்

சுறுசுறுப்பை மீட்டுக்கொள்வார்
அம்மா

அந்தத் தேநீரை
தயாரிக்கத் தான்
யாரையாவது தேடி ஏங்குகிறார்

*****

எத்தனை வாழ்த்துகள்
எத்தனை வருத்தங்கள்
எத்தனை கண்டனக் குரல்கள்
குறு காணொலிகளில்
யதார்த்தமாக யாவரும்
மனிதம் நிறைந்த தேவன்களே!

*****

மகளுக்கு
சற்றே நீண்ட விடுமுறை நாட்கள்
ஹையா...
என்றபடியே உலா போகிறது
மகளோடு அவளின் கால் கொலுசும்

*****

சாளரமே இல்லாத வீடு
அடைகாத்து நான்
பிரசவிக்கிற கவிதைகளுக்கெல்லாம்
மகளே சாளரம் நிலவு

*****

வெறும் மரங்கள்
தான் இருக்கின்றன
அங்கே வேறு
என்னத்த இருக்கிறது
சுற்றிப் பார்ப்பதற்கு?
என்கிறார்கள்

கெட்டக் காற்றை வாங்கினும்
நல்லக் காற்றதையே
நாசிக்குத் தருகிறக்
கடவுளை உணராதவர்கள்

—

பி. ஹேமா,
முசிறி.

# பேராசை

அந்த அடுக்களை
மேசையின் மீது..
*ஈக்கள்* மட்டுமே
மொய்த்துக்
கொண்டிருந்த
ரொட்டித் துண்டின்
மேல் கவனம் சென்றிட..
உற்றுப் பார்க்கின்றேன்
அதனை..
சுறுசுறுப்பே உருவான
ஒரு எறும்பின் வரிசையும்
அதனோடு
உறவாடிக் கொண்டிருக்கிறது..
எவ்வித
இடைஞ்சலும் இன்றி
ஆர்ப்பாட்டம்
ஏதுமில்லாமல்..
தங்களுக்கான உணவை
பங்கிட்டுப் பிரித்துக்
கொள்வதில்
எத்தனை கவனம்
இவைகளுக்கு..
இங்கு
தேவை என்பதைப் பொறுத்தே
இவைகளின் தேடலும்..
விழிகளை மூடினேன்..
ஒரு
பெருமூச்சோடே..
.....

## என்ன பார்க்கிறீர்கள்..

இங்கு
நான் உள்பட
பெரும்பாலும்
பேராசைக்காரர்கள் தானே..

—

நிவேதிகா பொன்னுச்சாமி

---

# தேடிக் கொண்டே இருக்கின்றேன்

எப்போதும்....
தேடுவது தான் வழியாக இருக்கிறது
தொலைந்து போவதற்கு.....

எடுத்துச் செல்ல வந்த பறவையை
நான் துரத்துவதற்கு ஓடுகிறேன்
குழந்தை
பிடிப்பதற்கு ஓடுகிறது....

கவிதைக்கும் இன்னொரு
கவிதைக்குமிடையில்
நான் இருக்கிறேன்.......
எனக்கும் இன்னொரு
எனக்குமிடையில்
கவிதை இருக்கிறது.......

—

கி. கவியரசன்,
செங்கம், திருவண்ணாமலை மாவட்டம்,
தமிழ் நாடு - 606701
கைப்பேசி: 7639563889

# ஆற்றைத்தேடி

இக்கரையிலிருந்து அக்கரை தெரியாத
இந்த ஆத்தங்கரையிலதான்
நம்ம முன்னோர் குலதெய்வத்துக்கு
பொங்கலிடுவார்களெனக்
கதைசொல்வாள் பாட்டி...

ஏரோட்டி முடித்து காளைகளுக்கு
நீர்காட்டுகையில்
காளைகளே முங்கிரும் அளவுக்கு
நீரோடும் ஆறு எனத் தன் இளவயதுக்
கதைசொல்வார் தாத்தா...

இடுப்பளவு நீரிலிறங்கி மீன்பிடித்த தன்
விடலைப்பருவக் கதைகளைச் சொல்லிச்
சிலாகிப்பார் அப்பா...

மழைபெய்யாத நாட்களில்
மட்டைப்பந்து மைதானமான ஆற்றை
என்பால்யகாலத்தில் நானும்
பார்த்திருக்கிறேன்...

ஆறிருந்த இடத்தில் கட்டிய
அடுக்குமாடிக் குடியிருப்பில் வளரும்
தொட்டிமீன்களை இரையிட்டபடியே
இரசிக்கிறான் மகன் இப்போது...

பாவம் மனிதர்களின்
பெரும்பசிக்கு இரையாகிப்போன
ஆற்றைத்தேடி அங்குமிங்கும்
அலைந்துகொண்டிருக்கின்றன
தொட்டிக்குள்
ஆற்று மீன்கள்.

—

உடுமலை காளிதாஸ்

---

# சாதனைகள் சாத்தியமே...!?

எத்தனை கடும் உழைப்பு...
எத்தனை தொடர் படிப்பு....
எத்தனை தேர்வுகள்....
எத்தனை போட்டிகள்....
எத்தனை மகிழ்ச்சிகள்...
எத்தனை விரக்திகள்...
எத்தனை விடாமுயற்சிகள்...
எத்தனை எதிர்பார்ப்புகள்...



ஆம்...
பொதுத்தேர்வில்...
தனியாத தன்னம்பிக்கையும்...
தாகம் கொண்ட எழுத்தும்...
முடிவைப் பற்றி பயமின்றி...
வெற்றியே இலக்காய் பயணி...
சாதனை உனக்கு சாத்தியமாகும்...!

—

முனைவர். சா சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.

# ஆத்ம நேசம்

கொஞ்சம் கொஞ்சல்
நிறைய கெஞ்சல்

கொஞ்சம் ஊடல்
நிறைய கவியாடல்

கொஞ்சம் தேனீர்
நிறைய தாகம்

கொஞ்சம் சண்டை
நிறைய சமரசம்

கொஞ்சம் போடி
நிறைய போடா

கொஞ்சம் மௌனம்
நிறைய சொற்கள்

கொஞ்சம் வம்பு
நிறைய அன்பு

கொஞ்சம் குறும்பு
நிறைய அலட்டல்

கொஞ்சம் கண்ணீர்
நிறைய காதல்

கொஞ்சம் தூரம்
நிறைய நெருக்கம்

மீண்டும் மீண்டும்
முதல்தடவை போன்றே
முகிழ்க்கும்
நம் ஆத்ம நேசம்



—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.

---

# பணிப்பெண்

வீட்டு உரிமையாளர்களின்
ஏவலைக் கேட்டு
பணிந்து நடக்கிறாள்!
தன் குடும்ப
வறுமையை ஒழிக்க
தன்னையே பணையம் வைக்கிறாள்!

கைரேகை தேய தேய
தேய்க்கும் பாத்திரத்தில்
தன் குடும்பத்தின்
எதிர்காலத்தை பார்க்கிறாள்!

தினமும் துவைக்கிறாள் வெளுப்பதே
இல்லை அவளது ஆடை மட்டும்!

கூட்டிப் பெருக்குகிறாள்

கழிவதே இல்லை
அவளது கடன் தொகை மட்டும்

முதலாளிகள்
தூக்கி எறியும் ஆடம்பரப் பொருட்களை
தன் குடும்பத்திற்காக
அத்தியாவசியமாக்குகிறாள்!

ஒரு நாள்
விடுப்பு எடுத்தால் அடுத்த நாள்
கூடி விடுகிறது பணிச்சுமை!

ஞாயிற்றுக்கிழமைகளிலும்
ஓய்வதே இல்லை கூடுதல் வேலை

நேர மேலாண்மை பணி பாதுகாப்பு
தொழிலாளர்களின் சட்ட திட்டங்கள்

எந்த கோரிக்கைகளும் ஏற்பதே இல்லை
நீதிமன்றங்களும்

மனமற்ற மனிதர்களால்
பாவப்பட்ட பணிப் பெண்ணின்
தன்மானத்தை சீண்டும் போது
தலைத் தூக்குகிறது தன் சுயமரியாதை!

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்,
கைப்பேசி: 6380704001



---

# உயிர்ச்சுழிக்கு..

*1*
வலை பின்னும் காமத்தின் பிடியில்
என்னை இழந்த போது நீ வந்தாய்
காதலின் உயிர் விரித்து
என்னைக் காப்பாற்றினாய்

*2*
உதடு குவித்து
உயிர் பாய்ச்சினாய்
இடை கொடுத்து
எனைத் தாங்கினாய்
விழி கொண்டு
ஒளி பாய்ச்சினாய்
உன்னைத் தந்து
என்னை இளைப்பாற்றினாய்
நினைவுகளின் நெடும் வெளியில் காதல்
உன்னை
என்னிடம் சேர்க்கிறது

*3*
வெளிச்சக்கதிர்கள் முத்தமிட்டதும்
அழுகை நீக்கி சிரிக்கும் புல்லாய்
வேதனைத் தாழ்ப்பாள் விலக்கி
உயிர்ச்சிறகை
உன் காதல் முத்தம் பறக்க வைக்கிறது
நம் நினைவுகளின் வாழ்வில்.

*4*
*வழிந்து ஓடும் நதியின்*
*உயிர்ச்சுழி தேடும்*
*நீச்சல் கண்டு*
*உயிர்மை கசியும்*
*கவிதையின் ஈரத்தில்*
*காதலை நினைத்தேன்*
*நீ வந்து நின்றாய்*

*5*
*காமத் திரை வந்து*
*கண்களை மூடியது*
*ஆசை வலை விரித்து*
*உள்ளம் அலைகிறது*
*எழுத்துகளின் நிர்வாணம் பெருக்கி கரம்*
*இளைப்பாறுகிறது*
*உன் காதல் என்னைக் காணும் வரை*

*6*
*தவறுகள் செய்து தருணங்களை*
*தொலைத்தவனுக்கு*
*நீளும் வானத்தின்*
*நீலத்தை அழிக்க முடிகிறது*
*வாழும் பொறுமையில்*
*மரங்களைப் பிடுங்கியபடி*
*காகிதங்களைப் பிரசவிக்கிறேன்*
*உன் வருகை நிகழாத போதெல்லாம்.*

—

*இளையவன் சிவா,*
*கைபேசி: 9965359130*



---

# இரட்சகன்

*ஐந்தாண்டு காலம்*
*குறைபட்டுக்கொண்டே*
*வாழ்ந்தொளிந்தோம்...*

*நேர்மையாளன் வருவானா*
*ரச்சிப்பானா எங்களை என்று*
*ஐந்தாண்டின் முடிவில்*
*வழங்கப்பட்ட பரிசுத்தொகையில்*
*மனமகிழ்ந்து பரிசுத்தன் அவன் என்று*
*மீண்டும் அவனுக்கே வாக்களித்தோம்*

*எங்களின் ரச்சகனாய் வந்தவனை*
*ஏறெடுத்தும் பாராது*
*ஒரு கை ஓசை எழுப்பாது*
*என்று அறியா மூடராய்...*

—

*ரா. சண்முகவள்ளி*
*ஸ்ரீனிவாசன்,*
*தென்காசி.*

# அப்படியாக – ஒரு மைக் கதை

என்ன சகோ இவன எங்கிருந்து புடிச்சீங்க... பேச்சை புடுங்குவானு பாத்தா மைக்க புடுங்கிட்டுருக்கான்...

சிறப்பு விருந்தினர் அமரானந்தா அலுங்காமல் காதில் கிசுகிசுத்தார்.

எனக்கும் ஒன்றும் புரியவில்லை.

சம்பந்தம் சம்பந்தம் இல்லாம பேசிட்டு இருக்கானே. என்ன கணக்கு இது. ரெண்டு இடத்தில் வேறு கை தட்டி விட்டேன். அப்போதே தாவோ நாற்காலியை சரி செய்வது போல வந்து.... "இப்ப எதுக்குணா கை தட்டின. அவன் ரெண்டாயிரம் நாலாயிரம் ஆறாயிரம்னு ஒரு படத்துல மெண்டல்ஸ் சொல்லுவாங்களே... அது மாதிரி 127, 189, 250னு பக்க எண்ணை சொல்லிட்டுருக்கான்... ஆமா..... உன் கவிதைய பாராட்டி பேசினாவே யாரோ கவிதைனு கை தட்டுற ஆள்தான நீ.. ஆனா இதெல்லாம் எங்களால தாங்க முடியாதுனா.. வெடிகுண்டு வீரனை விட்டுருந்தா கூட விதவிதமா பேசி விட்டிருப்பான்..." காதை கடிக்கத்தான் இல்லை. வெடித்து விட்டு போனான்.

கூட்டத்தில் இருந்து பாபி கூட பகிரியில் செய்தி அனுப்பி விட்டான்.

"என்னடா இவன் திடீர்னு வெடிமுத்து மாதிரி பேசறான். வெடிமுத்துக்கே வேட்டி அவுந்து கிடக்கு. இவன் இன்னும் ரெண்டாயிரத்தை விட்டே வரல போல..."

கண்களால் அமைதிப் படுத்திக்கொண்டே வெடிமுத்துவை.... ச்சே.. பேச்சாளரை கவனித்தேன். கலக்கம் உள்ளே கடகடத்தது. கண்களில் மிரட்சி வருவதைத் தடுக்க முடியவில்லை. ஆமா... கதைக்குள்ளயே வர மாட்டேங்கிறானே. அட டேபிளை வேற குத்தறான்.. இப்ப எதுக்கு காமனல்லாம் இழுக்கறான். மேடையில் அமர்ந்திருப்பதே பாடையில் அமர்ந்திருப்பது போல ஆகி விட்டதே.

பட்டிமன்றம் மாதிரி திடீர்னு திரும்பி காமெடி வேற பண்றான். அது காமெடின்னு சொன்னா... காம்ம்மனின் மாம்ம்ம்மன் கூட மன்னிக்க மாட்டான்.

"குனிஞ்சு புல்ல வெட்ட முடியலயாம்... தலைக்கு மேல ரெண்டு மூட்டை வேணும்ணானாம்..." இன்னொரு பேச்சாளர் பின்னிருந்து எட்டி என் காதில் கிசுகிசுத்தார்.

அமரானந்த ஸ்வாமிகள்... நெல்லையிலிருந்து கொண்டு வந்த அல்வாவை உருட்டிக்கொண்டே .... "சகோ இப்ப சொல்லுங்க... வீசி அடிச்சறேன்... என்னால தாங்க முடியல" என்றார்.

அமரானந்தாவையே
கோபத்துக்குள்ளாக்கி விட்ட பேச்சாளர்
பகட்டுவீரன் அவ்வப்போது கையைத்
தூக்கி தூக்கி யாருக்கோ சபதம் வேறு
போட்டுக் கொண்டிருக்கிறான்.
யார்னால கெட்டு போனவன் இவன்...
திரை இந்தப் பக்கம் இருக்க.. இன்னும்
படம் போடல... போடுவாங்கன்னு
விடிய விடிய சுவத்த பாத்துட்டு
உக்காந்துட்டுருந்த மோடுமுட்டி
மாதிரில்ல இருக்கான்.

காலத்துக்காக எழுதின கதையை
காமத்துக்காக என்று மாற்றி விட்டவனை
என்ன சொல்வது. அட போதும்ம்பா
நிறுத்திக்கோ.. என்று ஜாடை காட்டும்
போது எடுத்தானே உலக நாயகன்
குரலை. வெலவெலத்து போனோம்.
மேடை மீது அமர்ந்திருக்கும்
சான்றோர்கள் சறுக்கு விளையாட்டில்
தொங்குவது போல பார்த்தார்கள்.
அரங்கத்தில் அமர்ந்திருப்போர்
இதெல்லாம் தவறுங்க என்பது போலவே
பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அவனா... என்னென்னமோ
பேசிட்டுருக்கான்.

எனக்கு ஒரு நிமிசம் மட்டுமில்ல.
ஒவ்வொரு நிமிசமும் தலை தலையா
சுத்துது.

உன் புக்க பத்தி பேச சொன்னா அவன்
மூக்க பத்தி பேசிட்டு இருக்கான்...
பார்த்தாலும் பாவமா தான் இருக்கு...
பக்குவமா எடுத்து சொல்லி
அனுப்புங்கப்பா என்றார்... வெளியூர்
விருந்தாளி. வெள்ளரி சிரிப்பை தந்து
விட்டு வெறி கொண்டவனானேன்.

தாவோ மீண்டும் வேகமாய் ஓடி
வந்தான்.

என்ன என்று கண்களாலே கேட்டேன்.
என் காதருகேயே வந்து விட்டான்.

"அண்ணா இவன் பக்கத்து மேடைக்கு
போக வேண்டியவன்ணா. மாறி வந்து
இங்க பேசிட்டுருக்கான்.." என்று
தலையில் அடித்துக் கொண்டான்.

திக்கென கண்கள் விரிய பார்த்தேன்.
அட ஆமா... நமக்கு வர வேண்டியவர்
வர முடியாம என்ன விட நல்லா பேசற...
நம்ம டாபிக் தெரிஞ்ச ஒருத்தர்
இருக்கார். அனுப்பி வைக்கறேனு
சொல்லவும்... வந்தது அவர்தான்னு
நினைச்சிட்டேன்... இப்ப என்ன
செய்யறது.. படபடப்போடு பார்க்க
பார்க்க ஒரு வழியாக பேச்சை முடித்துக்
கொண்டு மைக்கை விட்டான். மைக்
சவ்வு மிட்டாய் மாதிரி நசுங்கி
போயிருந்தது.

என் மாமியார் வேற... ஓடி வந்து
"ஏனுங்க... புக்கே 350 பக்கம் தான். அந்த
தம்பி 389னு சொல்லுதுங்க..."னு
ஓனபத்திர பானாண்டி மாதிரி
போட்டுக்கொடுக்க...

ஐயோ அத்தே கொஞ்சம் அமைதியா
இருங்க என்று அமைதிப் படுத்தினேன்.
இன்னும் படபடப்பில் இருந்து நான்

வெளியேறவில்லை. மற்றவர்களும் தான்... மந்திரித்து விட்டது போலவே பார்த்தார்கள்.

"இலக்கியத்துல இதெல்லாம் சாதாரணமப்பா" என்று சொல்லிக்கொண்டே அமரானந்தா எல்லாருக்கும் கையில் கல்லாய் இருந்த அல்வாவை சீரியஸாக பிச்சு பிச்சு கொடுத்தார்.

சிரித்து விட்டோம்.

நிகழ்வு முடிந்து வெளியேறுகையில் மழையில் தொப்பலாக நனைந்தபடி ஒருவர் எங்கள் அருகே வந்து.. "நிகழ்வு.... பேச...." என்று இழுத்தார். நாங்கள் ஒரு கணம் உற்றுப் பார்த்துக் கொண்டே இன்னும் பலமாக சிரிக்கத் தொடங்கினோம்.

அப்படியாக.... கா.. கா.. கா...!

—

கவிஜி

---

# பெண்களும் மனிதர்களே ..!

ஆண்டுதோறும் மார்ச் 8 ஆம் தேதி மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பல்வேறு அமைப்புகள் இதனை கொண்டாடி வருகின்றன. பெண்கள் உரிமைகள் பற்றி பேசி வருகின்றனர்.

ஆனாலும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் முற்றிலும் நீங்கவில்லை என்பது கவலைக்குரியது.

பெண் உரிமைகள் குறித்து பல ஆண்டுகளாக பல தலைவர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் குரல் கொடுத்தும் போராடியும் வருகின்றனர். அதன் விளைவே இன்று பெண்கள் பெற்ற கல்வியும், எல்லா துறைகளிலும் பெண்கள் ஆண்களுக்கு நிகராக, ஏன் ஆண்களை மிஞ்சி சாதனை படைத்ததற்கு காரணம்.

இன்று படிப்பில் ஆரம்பித்து, விண்வெளி வரை பெண்கள் சாதித்து வருகிறார்கள் என்பது மனித குலத்தின் பெருமை.

இதற்கெல்லாம் காரணம் பெண் கல்வியே.

ஆனாலும் பெண்கள் இவ்வளவு உயரங்களை அடைந்த பின்னரும், இந்த சமூகத்தில் எங்கோ ஒரு வீட்டினில் ஒரு பெண்ணின் உரிமைகள் மறுக்கப்படுவதும், ஒரு தெருவில் பெண்ணை பற்றிய கேலி பேச்சும், பணி செய்யும் இடங்களில் அவளுக்கு இழைக்கப்படும் அநீதிகளும், சமுதாய வன்மங்களும் இவற்றை அங்கீகரிக்கும் சமுதாயமும் இன்னும் இங்கே பல

இடங்களில் இருப்பது வேதனை அளிக்க கூடிய செயல்.

பெண்களை இன்னும் கவர்ச்சி பொருளாகவும்,

ஆணிற்கு சேவை செய்ய பிறந்தவளாகவும் நினைப்பது அறியாமை. ஒரு பெண் முழு சுதந்திரத்தோடு வாழவும்,எந்த உயரத்திற்கும் செல்லவும் முழு உரிமை உண்டு. அதே நேரத்தில் ஒரு பெண் தனது சுதந்திரத்தை சரியாக பயன்படுத்த வேண்டும்.

ஆண், பெண் பாகுபாடுகள் பெரும்பாலும் இன்று குறைந்திருக்க காரணம் இருபாலரும் பெற்ற கல்வி அறிவும், அதனால் ஏற்பட்ட விழிப்புணர்வுமே.

ஒரு பெண் தான் வாழ்வதற்கு ஒரு ஆன் துணைய நம்பியேயிருக்க வேண்டும் என்கிற நிலையினை மாற்றி, ஒரு பெண் தன் சாம்பாத்தியத்தில் தன் கணவனை மட்டுமின்றி குடும்பத்தையே காப்பாற்றும் நிலை இன்று உருவானதற்கு காரணம் அவர்கள் பெற்ற கல்வியும், அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாய்ப்புகளும் ஆகும்.

ஆண்கள் பெண்களை முதலில் அவர்களும் மனிதர்களே என்று நினைக்க வேண்டும்.

தனக்கு இருக்கின்ற அத்தனை உரிமைகளும் பெண்களுக்கும் இருக்கிறது என்பதனை உணரவேண்டும். பெண்களுக்கு கொடுக்கப்படும் சலுகைகள் அவர்களின் உரிமை என்பதை உணர வேண்டும். எல்லா பெண்களையும் சமமாக நடத்தும் மணப்பக்குவம் வர வேண்டும்.

ஒரு ஆண் தன் மகளிடம் காட்டும் அன்பையும், அவளுக்கு கொடுக்கும் சுதந்திரத்தையும் தன் மனைவிக்கு கொடுத்துவிட்டால் சமத்துவம் வீட்டிலிருந்து துவங்கிவிடும்.

ஏனெனில் பெண்களின் முன்னேற்றம் இந்த சமுதாயத்தின் பெருமை, இந்த நாட்டின் வளர்ச்சி, அதனை அடைய தொடர்ந்து அனைவரும் செயல்படுவோம்.

—

முனைவர். சா சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# பழுத்த இலையின் புன்னகை (நூலறிமுகம்)

கவிதைத் தொகுப்பு




## ஆசிரியர்: நா.மயிலவன்

வெளியீடு: ஶ்ரீசக்தி

பக்கங்கள்: 86
விலை ரூ. 120/-
முதல் பதிப்பு டிசம்பர் 2024
தொடர்புக்கு: +91 9865261110

அனுபவத்தின் வாசலில் அன்பின் பயணம்..

தமிழாசிரியராகவும் தலைமையாசிரியராகவும் பணியாற்றி ஒய்வுபெற்ற மயிலவன் அவர்களின் ஐந்தாவது கவிதைத் தொகுப்பு இது. ஒரு தந்தையின் நடைபயணம், நாயுருவி, மௌனத்தின் மொழி, மகரந்தச் சேர்க்கை ஆகிய கவிதை நூல்களை எழுதியவரின் இந்த நூல் வாசிப்பும் அனுபவமும் ஒருசேரக் கலந்து எழுதப்பட்ட இயற்கையை நேசிக்கும் மற்றும் உறவுகளைப் பேணும் எண்ணங்களின் தொகுப்பு.

எழுத்தின் மீதான நேசமும் வாசிப்பின் மீதான பேரார்வமும் ஒரு சாதாரண மனிதனையும் இயற்கையின் மீதும் சக உயிர்கள் மீதும் அன்பை செலுத்த உந்துசக்தியாக மாற்றிவிடும். அத்தகு மனதில் உற்சாகமும் சுறுசுறுப்பும் நிறைந்து சமூகத்திற்கு நேர்மறை எண்ணங்களை உருவாக்கும் கருணை மலர்ந்திடும் என்பதை வெளிப்படுத்துகின்ற கவிதைகள் நிறைந்திருக்கின்றன.

இயற்கையை நேசிப்பதும் உறவுகளைப் பேணிப் பாதுகாப்பதன் அவசியத்தை உணர்த்துவதும் பண்பைப் பாராட்டுவதும் மனிதத்தை எல்லோருக்குள்ளும் வளர்ப்பதன் ஆசையும் நூலெங்கும் விரவிநிற்கின்றன. சிந்தனைகள் நேர்மறையில் உதிக்கையில் சொற்களும் சிறந்தனவாக மாறி உலகத்தின் மீதான இவரது பேரன்பை அடர்த்தியாக மொழிபெயர்த்துவிடுகின்றன.

எளிய சொற்கள் இயல்பான கட்டமைப்பு அறிந்த செய்திகள் இயற்கையை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் அறம் என தனக்கான மொழியைத் தேர்வுசெய்து எண்ணத்தை வரிகளாக்கியிருக்கும் இத்தொகுப்பில் ஒரு சராசரி கிராமத்து முதியவரின் வாழ்வியல் தடம்

தெரிகிறது. அதன் வழியே அவர் அடைந்திட்ட உயரம் தென்படுகிறது. அதுவே எல்லோருக்குமான அனுபவச் சிறகுகளை விரித்து விடுகிறது.

இயற்கையின் படைப்பில் காலத்தின் எழுதுகோலுக்கு காணும் எல்லாவற்றிற்கும் ஒற்றைச் சட்டம் தானே. இளமையும் முதுமையும் வாழ்வின் பக்கங்களாகி விடுகையில் மேல் கீழ் பேதங்கள் பயனற்றுப் போய் விடுகின்றன. அனுபவங்களின் பாதைகளை இளமையும் கவனத்தில் வைத்தால் பழுத்த இலையின் புன்னகைக்குள் பரிதவிப்புகளும் பரிதாபங்களும் மறைந்து விடுகின்றன. காலத்தின் கைப்பிடிக்குள் தன்னை ஒப்படைப்பவர்கள் காணும் யாவற்றிலும் பேதம் பார்க்காது பேரன்பையே விதைப்பவர்கள் என்பதை பழுத்த இலையின் புன்னகை படம்பிடித்துக் காட்டுகிறது.

இதயத்தில் கம்பனுக்கு இடம் தந்த பாங்கு, மலரின் கடைசி ஆசைக்கு மயங்கிய மனம், புறாக்களின் மீதான பாசம், பசிப்பிணி போக்கிய அட்சய பாத்திரமான கிழவியின் கரிசனம், ஆணி அடித்து மரங்களை சேதப்படுத்தும் அறிவிலித்தனங்களை சாடும் அறச்சீற்றம், பெற்றோர் மீதான பக்தியும் பாசமும் கலந்த நேசம், உழைப்பாளிகளின் உழைப்பைப் போற்றி வணங்கும் பண்பாடு, விவசாயத்தின் மீதான பற்றும் அதை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்ற ஓயாத தவிப்பும், ஒற்றை குடிசைக்குள் எண்ணிலாக் குழந்தைகளை வளர்த்த சூழலும் இல்லம் பெரிதாக எண்ணிக்கை குறைவாகச் சுருங்கிப் போன தனிமையும் கொடுத்த காலச் சூழல், வன்முறையும் பாதுகாப்பின்மையும் பெருகிவிட்ட காலத்தின் அவசரத் தன்மை, கருமியின் இதயத்தில் விழுந்த அன்பின் அவலம் என தான் கண்ணுறும் காட்சிகளின் வழியே உலகத்தில் இயல்புகளையும் நாட்டு நடப்பையும் கவிதைகளில் தெறிக்க விடுகிறார் கவிஞர்.

இளமையில் விதவை என்ற நிலையில் மூழ்கிய கனவுகளும் முடிந்துவிட்ட எண்ணங்களும் என பெண்ணுக்கான தனிமையைத் திணித்திடும் பொதுவெளியில் ஆருயிர் காதலியை அப்படியானதொரு நிலையில் கண்டுவிட்ட மனம் அவளுக்கான மறுவாழ்வை கட்டமைத்ததில் ஒளிர்கிறது எல்லா காலத்திற்குமான காதலின் பேரன்பு. பக்கங்கள் ஐந்தில் பகிரப்பட்ட இந்த உண்மை வாழ்வே முழுமையான காதலின் மகத்துவத்தை பேசி விடுகிறது "நிறம் மாறிய ரோஜா" கவிதையின் வழியாக.

தனிக் குடித்தனம், பெற்றோர்களை புறக்கணித்தல், கால ஓட்டத்தில் உறவுகளைத் தவிர்த்தல் என வாழும் ஆறறிவு மனிதர்களுக்கு பாடம் நடத்துகிறது பக்கம் 16 ல் உள்ள கவிதை.

"கூடி உண்ணல்
குஞ்சுக்கு ஊட்டல்
ஒற்றுமையும் ஒழுக்கம்

*சின்னக் கூடாய் இருந்தாலும் குதூகலமாய் குடும்பம் நடத்துகிறது".*

*பெருவெள்ளமா? மனிதர்களின் அலட்சியப் போக்கா? இயற்கைச் சீர்குலைவா? எதுவாயினும் நீச்சல் பழக இப்படியானதொரு தருணத்தை யாரும் எதிர்பார்க்கக் கூடாது. மிதந்தே செல்லும் அக்காவின் நிலையை எண்ணிப் பாருங்கள். வாசிக்கும் நமக்குள்ளும் நடுக்கம் வந்து விடுகிறது.*

*"அறை முழுக்க தண்ணீர்*
*இடுப்பளவு நீர்*
*கற்றுக் கொண்டேன் அறைகளுக்கெல்லாம்*
*நீந்தியே சென்று நீச்சல்*
*கற்றுக் கொண்டேன்*
*அக்காவுக்கும் ஆசைதான்*
*பாவம் அவளால் முடியவில்லை மிதந்தே செல்கிறாள்*
*- பக்கம் 17*

*மன அழுத்தமோ வேலைப்பளுவோ உறவச்சிக்கலோ பொருளாதாரப் பற்றாக்குறையோ எதுவாயினும் மதுவில் தீர்வைத் தேடும் மனிதர்களே குடும்பத்தை எண்ணிப் பாருங்கள் என எச்சரிக்கை விடுப்பதோடு நின்று விடாமல் சிறப்பான வாழ்வுக்கும் வழியமைத்து விடுகிறது "கவலையையும், மகிழ்ச்சியையும் குடும்பத்துடன் பகிர்ந்து கொள் மகிழ்வு பொங்கும் என்ற வரிகள்.*

*மனிதம் என்பது காணும் உயிர்களிடத்து கருணையை விதைத்தல் எனில் மனிதன் அப்போது கடவுளாக மாறி விடுகிறான். எங்கிருந்தோ வந்த ஏழை ஒருத்தியை தன் குடும்பத்தில் உறுப்பினராக ஏற்றுக் கொண்ட பக்கம் 22ல் உள்ள கதைக் கவிதையில் ஒளிந்து கிடப்பது எல்லோருக்குள்ளும் விதைக்க வேண்டிய பேரன்பும் பெருங்கருணையும் தானே.*

*நகை முரண்களுக்குள் இல்லறத்தில் இன்றைய நிலையையும் ஆணுக்குள் கிடந்திடும் இயக்கத்தின் இயலாமையையும் பெண்ணுக்குள் ஒளிந்திருக்கும் தனக்கானவன் என்ற ஆசையின் வெளிப்பாடும் கடவுளிடம் கேட்டிடும் வரத்தில் வெளிப்பட்டு விடுகின்றன பக்கம் 24ல் உள்ள நெடுங்கவிதை வழியாக.*

*நின்று நிதானித்து வாசிக்கக்கூடிய நேரமற்ற இன்றைய காலச் சூழலிலும் இதழில் நிறைய நெடுங்கவிதைகள் இடம் பெற்று நம்மை வாசிக்கத் தூண்டும்படியான கதைக் கவிதைகளாக இடம் பிடித்திருக்கின்றன. இடையே மூன்று வரிக் கவிதைகளும் நம்மை வெகுவாக ஆச்சரியப்படுத்துகின்றன.*

தன்னை முன்னிலைப்படுத்தாத எல்லா தகப்பன்களையும் படம் பிடித்து விடுகிறது கூச்சம் என்ற கவிதை. தன்னை மறந்து தன்னலம் துறந்து குடும்பத்தின் மேன்மைக்காக உழைப்பையே முழுமூச்சாக கொண்டு உயிர் வாழும் அப்பாக்களுக்கு இதன் வழியே சிறந்த காணிக்கையைத் தந்து விடுகிறார் கவிஞர்.

கூச்சம்
"எந்த நல்நிகழ்ச்சிக்கும்
செருப்பணிந்து செல்வதில்லை அப்பா
களவு போய்விடும்
என்ற கவலை அல்ல
நடந்து நடந்து உழைத்துத் தேய்ந்து நெருஞ்சி முள் குத்திக் குத்தி ஓட்டையான செருப்பைக் கூட்டத்தில் கழற்றிவிட
அச்சமல்ல
கூச்சம்".

மௌனத்தை விட சிறந்த மொழி ஏதுமில்லை. பேசிய சொற்களின் அர்த்தம் பேசாச் சொற்களின் ஆயுளை மேலும் நீட்டிக்கச் செய்கின்றன. சொற்களை விட புரிந்து கொள்ளும் உணர்விலேயே வாழ்வின் இயக்கம் முழுமை பெறுகிறது.

"பேசும் சொற்கள்
வலிமையானவை
சில சமயங்களில்
சொல்லாத சொற்கள் கூட
வலிமை உடையதாகிறது"
- பக்கம் 58.

எழுத்தின் மீதான இன்றையப் பார்வையை அங்கதத்தில் சொல்லப்பட்டாலும் மொழியின் மீதான பற்றும் ஈடுபாடும் இன்று மாணவர்களிடையே குறைந்து வருவதன் அவலத்தையும் உணர வேண்டும். மொழியை உணர்ந்து படிக்காமலும் சொற்களின் மீது ஆர்வம் காட்டாமலும் நுனிப்புல் மேய்ப்பவர்களாகவே இன்றைய இளைய தலைமுறை வளர்ந்து வருகிறது என்பதை இக்கவிதை கோடிட்டுக் காட்டிவிடுகிறது. எல்லோருக்கும் இருக்கும் மருத்துவராகும் பேராசைக்குள் புதைந்து விட்ட மொழி பற்றியும் இக்கவிதை படம் பிடித்து விடுகிறது.

"என் பேத்தி
மருத்துவராகும் ஆசை

அவள் கையெழுத்தில் தெரிகிறது புரியாத கிறுக்கல்"
- பக்கம் 77

இயற்கை எப்போதும் எந்தச் சூழலிலும் பேரழகையே நமக்கு பரிசாகக் கொடுத்து விடுகிறது. மலர்கள் குழந்தைகள் பறவைகள் எப்போதும் அழகானவை தானே. முதுமையிலும் வாசிப்பின் மீதான தீராக் காதலிலும் எழுத்தையும் கவிதைகளையும் நேசித்து உலகத்தை தனது அனுபவத்தின் வழியே உற்றுப் பார்க்கும் கவிஞரின் எண்ணங்கள் நம் எல்லோருக்கும் புன்னகையை விதைக்கின்றன. நூலின் அட்டை வடிவமைப்பு அருமையானதாக மாறி நூலுக்குள் நம்மை வெகுவாக ஈர்த்துவிடுவது நூலின் வாசிப்பிற்கு பெரும் துணை புரிகிறது.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



---

# மாமதுரை

தேரோடும் வீதியிது
தென்னவரின் படை வீடு!

தித்திக்கும் தமிழ் பேசும்
திரண்ட செல்வம் ஆடிவரும்!

மருண்ட பறவையினம்
மாளிகையைச் சுற்றி வரும்!

கருவண்டு ரீங்கரிக்கும்
சிறுமலரும் மலர்ந்து விடும்!

மகளிர் தம் ஆடல் கண்டு
தெருவெங்கும் புன்னகைக்கும்!

சின்னம் குழந்தைகளும்
பின்னியே ஆடி நிற்கும்!

வான் உயர எழுந்து நிற்கும்
கோபுரங்கள் ஒளி வீசும்!

வீரமுடன் வாலிபரும்
விளையாடி மகிழ்ந்து நிற்கும்!

வெறிகொண்ட எதிரிகளை
விரட்டியே அடித்து விடும்!

வெற்றிச்சங்கத்தை வானுயர
ஒலித்து நிற்கும்!

வைகை தன் வெள்ளத்தை
கரங்களால் தடுத்துவிடும்
மலர் வனங்கள் நிறைந்து நிற்கும்!

தமிழன்னைக் கோர் சங்கம்
கண்டே புன்னகைக்கும்!

மீனாட்சி அம்மையுமே
அருளாட்சி செய்து வரும்,
மாமதுரை எமது ஊராம் அதன் அழகை
பாருங்களேன் !!

— எம்.என். பாஸ்கரன்
கிராம நிர்வாக அலுவலர் (ஓய்வு)
மன்னார்குடி.



# அங்கேயிருந்தும்...

கைபேசி
மூக்கு கண்ணாடி
அறை சாவி
மருந்து
எடுத்துக்கொண்டயா

என வழியனுப்பும்
நிகழ்வில்
யாரோ யாரோவுக்கு
உதட்டு மொழி
செவியில் கேட்கையில்
நமக்கான நினைவூட்டலாயும்

## அவர்களும்...

தனித்த
செய்பணி முடித்து
உறக்க இரவுகளுக்கு
முன்னான பொழுதுகளில்

இன்னமும்
தெளிவாய்
நிதானமாய்
யோசித்து
பணி செய்திருக்கலாம்
என இன்றைய
நிகழ்வுகளுக்கும்

ஆரம்பிக்கும் முன்னே
துல்லியமாய் திட்டமிட்டு
நம்பிக்கையோடு
நாளைய எதிர்கொள்ள
வேண்டும் என்ற
சுய விசாரணைக்கு

ஆமாம் போடும்
சத்தம் எழுப்பி
கடிகாரமும்
மின்விசிறி அசைவில்
சலசலக்கும் நாட்காட்டியும்

## அவர்களால்

இவர்கள்...

விருப்பத்தால்
இலக்கு

வாசிப்பால்
யோசிப்பு

ஆர்வத்தால்
கற்றல்

நம்பிக்கையால்
எதிர்பார்ப்பு

மனிதத்தால்
கருணை

முயற்சியால்
வெற்றி

பாராட்டால்
அங்கீகாரம்

இழப்பால்
வேதனை

தோல்வியால்
கவலை

தன்திருப்தியால்
உவகை

## ஆனா...

பள்ளிக்காலங்களில்
கோடை விடுமுறைக்கு முன்பே
அதை யோசித்ததும்
வந்த பின்
தன் வயதை ஒத்த
உறவுகளின்
வருகையும்
அவர்களோடு
ஒரு வருடத்து நிகழ்வுகளை
வாய் ஓயாமால்
பகிர்ந்ததும்
பகிர்ந்ததை
கேட்டதும்

அன்றைய நாட்களில்
ஒரே பொழுது போக்கான
திரைப்படத்தை பார்த்து விட்டு அடுத்த
படம்
என்றைக்கு வரும்
என அறிய
திரையரங்கு வாசலில்
சுவர் விளம்பரத்துக்காய்
காத்திருந்த பொழுதுகளும்

கல்லூரி காலங்களில்
அருகில் வசிக்கும்
சகாக்களோடு
விளையாட்டு
சமூகம்
அரசியல்
படிப்பு
பற்றி தெரு முனையில்
மணிக்கணக்கில்
நின்று கொண்டே பேசிய
பேச்சுகளும்

வருடத்துக்கு ஒரு
முறை நடக்கும்
ஊர் விழாவான
சித்திரைத்திருவிழாவில்
ஆற்றங்கரையில்
பொழுது போக்கு நிகழ்ச்சிகளை

பார்த்து கொண்டே
பெரிய நட்பு கூட்டத்தோடு
பேசிக்களித்த பொழுதுகளும்

படிப்பு முடித்த பின்
வேலைக்கான காத்திருப்பு
பொழுதுகளில்
வருத்தம் மறக்க
திரைப்படம் சென்று
கண்கள் மட்டும்
திரையிலும்
மனது எதிர்காலம் பற்றிய
யோசனையிலும்
இருந்த பொழுதுகளை
இப்படியாய்
நினைவில் உள்ளவற்றை

இல்லாதவற்றை
யோசித்து நினைவுக்கு
கொண்டு வந்து இன்று
அசை போட
ஆசை தான்

ஆனால் இது
நடக்க வேண்டும் எனில்


நாளை
இதுவா அதுவா
ஒற்றையா இரட்டையா
என ஆட்டம் காட்டமால்
சலனமற்ற மனநிலையும்

அடுத்து அடுத்து
என ஓடிக்கொண்டே
இருக்காமால்
கொஞ்ச நேரமேனும்
அமைதியாய்
இருக்கும்
புத்தியும்
தேவை

--

*A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.





ஓவியம்:
**மா. நிரல்யா,**
இரண்டாம் வகுப்பு, சிங்கப்பூர்.

# இலக்கியம்

இறுகிய இதயங்களை இலகுவாக்கும்
அற்புதக் கருவியே இலக்கியம்!

உருகிடும் உள்ளத்தை என்றும் உறுதியாய்
தைப்பதே இலக்கியம்!

சிந்தையின் வலிமையைச் சிறகிட்டு
பறக்கச் செய்யும் செம்மையே
இலக்கியம்!

சிதைந்த மனத்தினை சீராக்கும்
வலிமையல்லவா இலக்கியம்!

இலக்கினை மையப்படுத்தும்
இயல்பினைத் தருவது தானே
இலக்கியம்!

இன்னலைத் தொலைத்திட இனிமையாய்
வந்தது தானே இலக்கியம்!

துன்பங்கள் நமக்கு தொடர்ந்தும்
வரலாம்...
துயரங்கள் பிறரால் படர்ந்தும் வரலாம்...
எண்ணங்கள் நம்மை எளிமையும்
தரலாம்...

இலக்கியம் ஒன்றே ஏற்றத்தைக்
கொடுக்கும்...
நெஞ்சிற்கு என்றும் மருந்தென
நிலைக்கும்...
இலக்கியம் ஒன்றே விருந்தென
மயக்கும்...



- (வாழ்வியல் கவி)
சா.நாகூர் பிச்சை, துபாய்.

---

# முத்தத்தின் பிரதான தீர்த்தம்...

என் மனம்
கொத்தி வந்த பறவை;
இந்நேரம் என் காதலை
சமர்ப்பித்திருக்கும்
உன்னிடத்தில்...!
/

இன்னும்
எழுதி முடிக்காத
பக்கத்தை உன்னிடம்
கலந்தாலோசித்ததும்
முடிக்கலாம் என்றிருக்கிறேன்

ஏனெனில்
அது உனக்கான கவிதை...!
/

பொத்தானை அழுத்தியதும்
தன் கடமையைச் செய்கிறது
மின்விசிறி.
பலனை எதிர்பாராமல்
புத்தகத்தைப் புரட்டுகிறது
காற்று.
/

என்னை வாசல் வரை
வந்து வழியனுப்புவாய்
என்றிருந்தேன்.
உன் வீட்டு ரோஜா செடிக்கு

வாய்த்திருக்கிறது
அப்பாக்கியம்.
/

எத்தனை முறை பறித்தாலும்;
என் இதயச் செடியில்
பூத்துக் கொண்டே இருக்கும்
பூக்கள்.
/

எனக்கு யாரோடும்
பிணக்கில்லை ஆதலால்
நானாகவே நான்.
/

தேடித் தேடித் தோற்றாலும்
தேடலை நிறுத்தாது
அலைகள்.
/

உறக்கம் சூல் கொண்ட
குழந்தையின் விழிகள்
காணக்காண பேரழகு.
/

என்னவளின்
கண்களில் இருந்து
கசியும் இசை
பலமாகத் தாக்குகிறது;
என்னிதய வீணையை.
/

இதழ்களெனும் நதியில்
வழியும் எச்சில்; முத்தத்தின்
பிரதான தீர்த்தம்.
/

அவள் பார்வை
நகரும் திசையெங்கும்
அன்பின் வாசம்.
/

என்னை எரித்தால்
ஃபீனிக்சு பறவை
புதைத்தால் விருட்சம்.
/

பூப்பெய்திய தகவலை
வண்டுகளுக்கு; காற்றின்
மூலமே சொல்லி இருக்கும்
பூக்கள்.
/

வேப்பம் பூவிலும்
இனிப்புச்சுவை
தேன்.
/

மிதிப்பவரின் பாதங்களை
தன்கண்ணீரால் கழுவும்.
அதிகாலைப் புல்வெளி.

—

பாரியன்பன் நாகராஜன்,
82/32 -B, பிள்ளையார் கோவில் தெரு,
காமாட்சி அம்மன் பேட்டை,
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

*விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.*

*மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.*

*நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.*

*நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...*
*மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com*
*பகிரி: +91 8220567322*

*படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...*
*மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com*
*பகிரி: +91 8220567322*

*தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...*
*பகிரி: +91 8220567322*

*இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...*

*அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.*

—

*கி. மாணிக்கம்,*
*திறவுகோல் ஆசிரியர், குழு.*